| F–6677 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**First Semester**

**தமிழ்**

**சிறப்புப்பாடம் – சிலப்பதிகாரம் –.புகார்க்காண்டம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'இருநிதிக்கிழவன்' மகன் யார்?

2. உருவிலான் யார்? அவனது வில் யாது?

3. 'ஒருமுகஎழினி' விளக்கம் தருக.

4. புகார் நகரில் மாலை வரவு எவ்வாறிருந்தது?

5. இலஞ்சி மன்றத்தின் சிறப்பு யாது?

6. 'வஞ்சம் பெயர்த்த மாபெரும் பூதம்' புகாருக்கு வந்தது எவ்வாறு?

7. காவேரி செவிமடுத்த ஓதைகளாக இளங்கோவடிகள் கூறுவனவற்றுள் இரண்டினைக் குறிப்பிடுக.

8. 'மாலை வாரார் ஆயினும் காலை காண்குவம்' என்று காத்து இருந்தவர் யார்? அதற்கான பின்புலம் யாது?

9. 'பீடு அன்று' யார் கூற்று? விளக்கம் தருக.

10. 'மதுரை மூதூர் யாது' என வினவியவர் யார்? அதற்குக் கோவலன் கூறிய விளக்கம் யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) காப்பிய நாயகியான கண்ணகியை இளங்கோவடிகள் எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார்?

(அல்லது)

(ஆ) 'கதிர் ஒருங்கு இருந்த காட்சி போல' உவமையை விளக்குக.

12. (அ) இசையாசிரியனுக்குரிய இலக்கணம் யாது?

(அல்லது)

(ஆ) கண்ணகியின் தனிமைநிலை குறித்து எழுதுக.

13. (அ) 'ஐவகை மன்றங்கள்' குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) மாதவி தன்னை அலங்கரித்துக் கொண்ட பாங்கை விளக்குக.

14. (அ) காவேரியை வாழ்த்திக் கோவலன் பாடிய பாடல்களின் செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) மாதவி எழுதிய திருமுகச் செய்திகளைத் தருக.

15. (அ) கண்ணகி கண்ட கனவு யாது? விளக்குக.

(அல்லது)

(ஆ) கவுந்தியடிகள் வழங்கிய உறுதிமொழிகளை எடுத்துரைக்க.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மங்கல வாழ்த்துப் பாடல் செய்திகளை இளங்கோவடிகள் வழி நின்று விளக்குக.

17. அரங்கேற்று காதை புலப்படுத்தும் இசையின் பெருமையினை விரித்துரைக்க.

18. கானல் வரி கண்ணீர் வரியான சோகத்தை விளக்குக.

19. கனாத்திறன் உரைத்த காதையில் கண்ணகி தேவந்தி உரையாடல்வழி அறியலாகும் செய்திகளைத் தருக.

20. நாடுகாண் காதையில் கூறப்பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————

| F– 6678 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**First Semester**

**தமிழ்**

**இக்கால இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. நரி உயிர் சிறு சேவகர் என்று பாரதி யாரைக் குறிப்பிடுகிறார்?

2. ‘மண்படு கல்வி’ என்று பாரதி எதனைக் குறிப்பிடுகிறார்?

3. புதுக்கவிதை என்றால் என்ன?

4. ‘பட்டாம்பூச்சி விற்பவன்’ நூலாசிரியர் யார்?

5. சிறுகதை வரைவிலக்கணம் கூறுக.

6. பிரபஞ்சன் குறிப்பு வரைக.

7. குறுநாவல் என்றால் என்ன?

8. ‘குத்தகை மனிதர்கள்’ யார்?

9. கடமை என்றால் என்ன?

10. அரு.சோ குறிப்பு வரைக.

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) பிள்ளைக் காதல் குறித்து பாரதி கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) பாரதி சுயசரிதையில் மணம் குறித்துக் கூறுவன யாவை?

12. (அ) தூர்வாரும் போது ஏற்படும் இளமைக் கால மகிழ்ச்சி குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பிள்ளைப்பருவ நினைவுகள் குறித்து நா. முத்துக்குமார் கூறுவன யாவை?

13. (அ) கற்பு குறித்து புதுமைப்பித்தன் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) வீட்டின் மூலையில் சமையலறை கதையில் காணலாகும் பெண்ணியக் கருத்துக்களைக் கூறுக.

14. (அ) துணிந்தவன் நாவலில் காணலாகும் சமூக மதிப்பீடு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) துணிந்தவன் குறுநாவலின் கதைப் போக்குக் குறித்துக் கூறுக.

15. (அ) கடமை நாடகம் சமூகத்திற்கு அளித்திடும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கடமை - நாடக வடிவம் குறித்து விளக்குக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. பாரதி சுயசரிதையில் கல்வி குறித்துக் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

17. நா. முத்துக்குமார் கவிதையில் காணலாகும் சமூக மதிப்பீடுகள் குறித்து எழுதுக.

18. ‘பொன்னகரம்’ கதையில் காணலாகும் வாழ்க்கை முறை குறித்து எழுதுக.

19. மாதவன் கதாபாத்திரத்தின் மூலம் துணிவு குறித்து வல்லிக்கண்ணன் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

20. கடமைகளைச் செயல்படுத்த வேண்டிய முறைகள் குறித்து அரு.சோ கூறுவனவற்றை எடுத்துரைக்க.

———————

| F–6679 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT1C2 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022

**First Semester**

**தமிழ்**

**இலக்கணம் நன்னூல் (எழுத்து) இலக்கணம் யாப்பு**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நூல் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
2. மெய்யெழுத்துக்களின் வகைகளைக் குறிப்பிடுக.
3. மெய்ம்மயக்கத்தின் வகைகளை எழுதுக.
4. பதம் என்றால் என்ன?
5. புணர்ச்சியில் ஏற்படும் மாற்றங்களை எழுதுக.
6. 'பூப்பெயர் முன் இனமென்மையும் தோன்றும்' – விளக்குக.
7. நேரசை என்றால் என்ன?
8. வெண்பாவிற்குரிய தளைகள் யாவை?
9. ஆசிரியப்பாவின் இனங்களைக் குறிப்பிடுக.
10. கலிப்பாவின் உறுப்புக்களைக் குறிப்பிடுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) மாணவர்கள் பாடங்கேட்கும் முறை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சார்பெழுத்துக்களின் வகைகளை விளக்குக.

12. (அ) பகுபத உறுப்புக்கள் குறித்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) தொண்ணூறு, தொள்ளாயிரம் புணர்ச்சி விதி கூறுக.

13. (அ) திசைச்சொற்கள் திசைச்சொற்களோடு புணரும் போது ஏற்படும் மாற்றங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'ல, ள வேற்றுமையில் ற, ட வும்' – என்னும் நூற்பாவை எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி எழுதுக.

14. (அ) சீர் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

(அல்லது)

(ஆ) தளை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

15. (அ) பாக்களுக்குரிய ஓசைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வெண்பாவின் பொது இலக்கணம், அதன் வகைகள் குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. எழுத்துக்களின் பிறப்புக் குறித்து நன்னூலார் கூறுவனவற்றைத் தொகுத்தெழுதுக.

17. குற்றியலுகரப் புணர்ச்சி குறித்து விரித்தெழுதுக.

18. உருபுகள் புணருமாற்றை விளக்கி எழுதுக.

19. அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்கள் குறித்து விளக்குக.

20. ஆசிரியப்பாவின் பொது இலக்கணம், அதன் வகைகள் குறித்து எடுத்துக்காட்டுகளுடன் விளக்கி எழுதுக.

| F–6681 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Second Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் - சிலப்பதிகாரம் - மதுரைக் காண்டம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. மதுரைக்குச் செல்லும் வழியைக் கோவலன் யாரிடம் வினவினான்?

2. ‘பேதுற மொழிந்தனள் மூதறிவாட்டி’ என்று கண்ணகி யாரைச்சுட்டுகிறாள்? காரணம் யாது?

3. ‘வருந்தினை போலும் நீ மாதவி இது யார் கூற்று? இவ்வாறு கூறக் காரணம் யாது?

4. ‘வேதமுதல்வன்’ என்று கவுந்தியடிகள் யாரைக் குறிப்பிடுகிறார்?

5. ‘கடக்களிறடக்கிய கருணை மறவன்’ யார்? விளக்கம் தருக.

6. ‘எழுகென எழுந்தாய், என் செய்தனை?’ என்று கோவலன் யாரை நோக்கிக் கூறினான்?

7. ‘தாயும் நீயே ஆகித் தாங்கு’ எனக் கவுந்தியடிகள் யாரை யாரிடம் அடைக்கலப்படுத்தினார்?

8. கண்ணகி கதிரவனை நோக்கி விடுத்த வினா யாது?

9. ‘தெய்வமும் உண்டு கொல்’ யார் கூற்று? விளக்கம் தருக.

10. ‘அரசி கண்ட தீக்கனா யாது’?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) பாண்டிய மன்னனை வாழ்த்தி மாங்காட்டு மறையோன் கூறியனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) குமரிக்குப் புனைந்த கொற்றவைக் கோலத்தின் இயல்புகளை விவரிக்க.

12. (அ) மாதரி எழுதிய மடலின் மாண்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) தனித்துயர் உழந்த கோவலனுக்குக் கவுந்தியடிகள். உரைத்த தேறுதல் மொழிகளைத் தொகுத்துரைக்க.

13. (அ) அடைக்கலப்பொருளின் சிறப்பினை நும் பாடப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

(ஆ) மாதவி இல்லத்தில் நடந்த கோவலன் கண்ணகி உரையாடல் செய்திகளைத் தருக.

14. (அ) திருமால் பெருமைகளை ஆய்ச்சியர் குரவை எவ்வாறு எடுத்தியம்புகின்றது?

(அல்லது)

(ஆ) துன்பமாலை தரும் கண்ணகியின் துயரநிலையைப் புலப்படுத்துக.

15. (அ) கொலையுண்டு கிடந்த கணவனைக் கண்டு கண்ணகி கலங்கியுரைத்த மொழிகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கண்ணகியின் தோற்றம் குறித்து வாயிற்காப்போன் மன்னனிடம் கூறியவற்றை எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க:

16. மாங்காட்டுமறையோன் பாத்திரம் வாயிலாகச் சொல்லப்பெறும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

17. பண்டைக் காலப் பாண்டிய நாட்டுத் தலைநகரான மதுரையின் மாண்பை நுமது பாடப்பகுதி கொண்டு விளக்குக.

18. கோசிகமாணி, மாடலன் ஆகிய பாத்திரங்களின் வாயிலாகக் கோவலனின் சிறப்புகள் எவ்வாறு எடுத்துரைக்கப்பெறுகின்றன?

19. வேட்டுவ வரி மற்றும் ஆய்ச்சியர் குரவை ஆகியவற்றின்வழி, அக்கால மக்களின் வழிபாட்டுமுறைகளை இளங்கோவடிகள் எடுத்துரைக்கும் பாங்கை விளக்கிக் கட்டுரை வரைக.

20. கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்பதை மன்னனிடம் நிறுவிய திறத்தை விளக்கிக் கட்டுரை தருக.

———————

| F–6682 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2S2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Second Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் – திருக்குறள் – அறத்துப்பால்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க

1. ‘மனக்கவலை மாற்றல் அரிது’ யாருக்கு?

2. ‘கற்பென்னும் திண்மை உண்டாகப்பெறின்’ விளக்குக.

3. ‘அல்லவை தேய அறம் பெருகும்’ எப்போது?

4. ‘சான்றோர்க்கு அணியாவது’ யாது?

5. ‘இன்மையுள் இன்மை’ எது? விளக்குக.

6. ‘மறந்தும் பிறன்கேடு சூழற்க’ – சூழ்ந்தால் என்ன ஆகும்?

7. வாழ்வார், வாழாதவர் என்று திருவள்ளுவர் குறிப்பிடுவோர் யாவர்?

8. வாய்மை எனப்படுவது யாது?

9. தவத்திற்கு உரு என்று திருவள்ளுவர் சுட்டுவனவற்றைத் தருக.

10. ‘இருவேறு உலகத்து இயற்கை’ – விளக்கம் தருக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) அறன் வலியுறுத்தல் அதிகாரச்செய்திகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) நன்மக்கட்பேற்றின் சிறப்புக்களை விவரிக்க.

12. (அ) விருந்தோம்பல் சிறப்பை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) ஒழுக்கமுடைமையின் உயர்வை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.

13. (அ) பிறனில் விழைதலால் வரும் கேடு குறித்துத் திருவள்ளுவர் தரும் எச்சரிக்கைகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'புறங்கூறல்' கூடாது எனத் திருவள்ளுவர் உரைப்பதற்கான காரணங்களைத் தருக.

14. (அ) 'புகழ்' அதிகாரம் தரும் செய்திகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'புலால்' மறுத்தலின் சிறப்புக்களை விவரிக்க.

15. (அ) கொல்லாமையின் மேன்மையைத் திருவள்ளுவர் வழிநின்று விளக்குக.

(அல்லது)

(ஆ) நிலையாமை பற்றித் திருக்குறள் கூறுவனவற்றைத் தருக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. இல்லறத்திற்கு இன்றியமையாத நெறிகளாகத் திருவள்ளுவர் கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

17. துறவின் இலக்கணம் தந்து அந்நெறி நிற்பார் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களை விரித்துரைக்க.

18. கள்ளாமை, வெகுளாமை, கொல்லாமை, புறங்கூறாமை குறித்துத் திருவள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

19. வாழ்க்கை சிறக்க, வள்ளுவர் கூறும் உடைமைகளை எடுத்தியம்புக.

20. அறத்துப்பால் வழியே மனிதவாழ்வு சிறக்கத் திருக்குறள் காட்டும் நன்னெறிகளைத் தொகுத்துக் கட்டுரை தருக.

———————

| F–6683 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Second Semester**

தமிழ்

அற இலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. கல்வி எதற்கு மருந்து என நாலடியார் கூறுகின்றது?

2. பல்லவர் தூற்றும் பழி எவை?

3. பாம்பு எதனால் நோய் செய்யும்?

4. வெல்வது வேண்டின் ஒருவர் செய்ய வேண்டியது என்ன?

5. அமிழ்தின் இனிது எது?

6. யார் வாழும் பதி எனிதென இனியவை நாற்பது உரைக்கின்றது?

7. பூத்தலின் பூவாமை நன்று-ஏன்? எது?

8. கடும்பகல் ஏதிலான் பாற்கண்ட இல்லினும் பொல்லாதது எது?

9. அடங்காக் குடிகள் என்ன நேரும் என வேதநாயகர் கூறுகின்றார்?

10. அழியாத உடம்பினை அருளினன்-யார்? ஏன்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கொள்கையில் குன்றாதவர் யார்? நாலடியார் வழி விளக்குக.

(அல்லது)

(ஆ) திங்களும் சான்றோரும் ஒப்பாவது எப்படி? நாலடியார் கருத்தை எழுதுக.

12. (அ) தவத்தால் நோய் தருவார் யார் ஏன்? எப்படி?

(அல்லது)

(ஆ) சான்றோரைப் பிணிப்பது எப்படி என நான்மணிக்கடிகை உரைக்கின்றது?

13. (அ) தந்தையே ஆயினும், தான் அடங்கான் ஆகுமேல்- என்ன செய்ய வேண்டும்?

(அல்லது)

(ஆ) கற்றார் முன் கல்வி உரைத்தல் பற்றி இனியவை நாற்பது கூறியுள்ள கருத்துக்களை எழுதுக.

14. (அ) நோற்றார் பெருமை குறித்து நீதிநெறி விளக்கம் கூறுவன யாவை?

(அல்லது)

(ஆ) கல்விச் செருக்குத் தேவையா? விளக்குக.

15. (அ) மன்னன் இன்றேல் குடிகளுக்கு என்ன நேரும்?

(அல்லது)

(ஆ) பிறப்பறுக்கும் பெருமைக்குரியவர் குறித்து எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. குடிப்பிறப்பின் தன்மைகளை நாலடியார் வழிப் புலப்படுத்துக.

17. நான்மணிக்கடிகை கூறும் மனித மேம்பாட்டுக் கருத்துக்களை உரைக்க.

18. பூதஞ்சேந்தனார் கூறும் இனியவற்றைத் தொகுத்துரைக்க.

19. செல்வர்கள் குறித்து குமரகுருபரர் பார்வையினை விவரிக்க.

20. குடிகளின் இயல்பாக மாயூரம் வேதநாயகர் கூறும் கருத்துக்களைத் தருக.

———————

| F–6684 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT2C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Second Semester**

தமிழ்

இலக்கணம் – நன்னூல் (சொல்லும் அணியும்)

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. மூவிடங்கள் யாவை?

2. குழூஉக்குறி என்றால் என்ன? சான்று தருக.

3. தெரிநிலை வினைமுற்று குறித்து எழுதுக.

4. முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் யாவை?

5. மரபாவது யாது?

6. கொல் என்னும் இடைச்சொல்லின் பொருட்கள் யாவை?

7. குளகம் – பொருள் தருக.

8. காப்பியம் என்றால் என்ன?

9. தன்மையணி குறித்து எழுதுக.

10. ஒட்டணி என்றால் என்ன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடையளிக்க.

11. (அ) பெயர்ச்சொல்லின் பொதுவிலக்கணத்தை எழுதுக.

(அல்லது)

(ஆ) வினையெச்சம் குறித்து விளக்குக.

12. (அ) வழுக்களைச் சான்றுகளுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) அறுவகை வினாக்கள் குறித்து எழுதுக.

13. (அ) இடைச்சொல்லின் இலக்கணத்தை வரையறுக்க.

(அல்லது)

(ஆ) உம் இடைச்சொல் தரும் பொருட்களை எழுதுக.

14. (அ) செய்யுளின் வகைகளை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கௌட நெறியினைச் சான்றுடன் விளக்குக.

15. (அ) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் எழுதுக.

(அல்லது)

(ஆ) உவமை அணியின் வகைகளை எழுதுக.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. வேற்றுமை குறித்துச் சான்றுகளுடன் விளக்குக.

17. தொகைநிலை, தொகாநிலைத் தொடர்கள் குறித்து விளக்குக.

18. உரியியல் தரும் செய்திகளைத் தொகுத்தெழுதுக.

19. காப்பிய இலக்கணம் குறித்து தண்டியலங்காரம் கூறுவனவற்றை விளக்கி எழுதுக.

20. உருவக அணி குறித்து விரித்தெழுதுக.

———————

| F–6685 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT3S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Third Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் சிலப்பதிகாரம் - வஞ்சிக்காண்டம்

**(CBCS – 2017 onwards)**

Time : Three Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடைளிக்க.

1. ‘சூர்மா தடிந்த வேல்’ உடையவன் யார்?

2. ‘குறமகள் அவள் எம் குலமகள்’ யார் கூற்று விளக்குக.

3. குன்றக்குறவர் கண்ணகி குறித்துச் செங்குட்டுவனிடம் கூறியது யாது?

4. செங்குட்டுவனை வாழ்த்தி நாடகமடந்தையர் கூறியன யாவை?

5. ‘மாதவி பாடிய கானல்பாணி எவரது முடித்தலையை கூறியவன் யார்?

6. செங்குட்டுவனை, வேள்வி செய்ய வேண்டும் எனக் கூறியவன் யார்?

7. ‘தேவந்தி’ குறிப்பு வரைக.

8. ‘குமரியோடு வடஇமயத்தை ஒருமொழி வைத்து உலகு ஆண்ட’ மன்னன் யார்?

9. அரட்டன் செட்டி மகளாகிய கண்ணகியின் தாய் உரைத்த வாசகத்தை எழுதுக.

10. சேடக்குடும்பியின் மகளாகப் பிறந்தவள் யார்? அவள் கூறிய மொழி யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) கண்ணகியைக் கண்ட குன்றக்குறவர் யாது வினவினர்? அதற்குக் கண்ணகி அளித்த பதில் யாது?

(அல்லது)

(ஆ) குன்றக்குறவர் பத்தினியைப் பரவிய பாங்கை நும்பாடப்பகுதி கொண்டு புலப்படுத்துக.

12. (அ) மலைவாழ்மக்கள் சேரன் செங்குட்டுவனுக்கு வழங்கிய பரிசுபொருட்கள் யாவை?

(அல்லது)

(ஆ) சேரன் செங்குட்டுவனிடம் வில்லவன் கோதை எனும் அமைச்சர் உரைத்தவை யாவை?

13. (அ) செங்குட்டுவன் உரைத்த வஞ்சினம் யாது?

(அல்லது)

(ஆ) நிலையாமை குறித்து மாடலன் கூறிய செய்திகளை எடுத்துரைக்க.

14. (அ) கண்ணகியின் தோழி, அடித்தோழி காவற்பெண்டு ஆகியோர் கூறிய மொழிகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) வாழ்த்துக்காதையின் கந்துகவரி, ஊசல்வரிப்பாடற்செய்திகளைத் தொகுத்துரைக்க.

15. (அ) மணிமேகலையின் துறவு குறித்து, தேவந்தி தந்த விளக்கம் யாது? விரித்துரைக்க.

(அல்லது)

(ஆ) பாசண்டன், தேவந்தி கதையை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும்** மூன்றனுக்கு கட்டுரை வடிவில் விடைளிக்க.

16. மலையக மக்களின் பக்திச்சிறப்பைக் குன்றக்குரவைவழி நின்று விளக்குக.

17. வடதிசைநோக்கிச் சேரன் செங்குட்டுவன் படை நடத்தியமைக்கான காரணங்களைத் தந்து பின்னர் நிகழ்ந்த வெற்றிச் சிறப்பை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.

18. வஞ்சிக்காண்டத்தில் தோன்றும் மாடலனின் பாத்திரச் சிறப்பைப் புலப்படுத்தி அவன் கூறிய செய்திகளைத் தொகுத்துரைக்க.

19. தமிழர்தம் ஒற்றுமையை வஞ்சிக்காண்டம் மூலமாக இளங்கோவடிகள் வலியுறுத்திய பாங்கைப் புலப்படுத்துக.

20. வாழ்த்துக்காதை வாயிலாக அறியலாகும் கண்ணகியின் பெருமையைப் புலப்படுத்துக.

———————

| F–6689 |
|---|

| Sub. Code |
|---|
| 7NME3D |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Third Semester**

தமிழ்

துறைசாரா விருப்பப்பாடம் : மக்கள் தகவல் தொடர்பியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. ‘எண்பேராயம்’ என்ற அமைப்பில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தனர்?

2. ‘காலாடி’ – யார்?

3. ‘சகோதர, சகோதரிகளே!’ என்று சிகாகோவில் விளித்தவர் யார்?

4. ‘எனக்குத் தாமதம் பிடிக்கும்’ – என்றவர் யார்?

5. சகுந்தலை துஷ்யனுடன் எவ்வாறு செய்தித் தொடர்பினை மேற்கொண்டாள்?

6. விசயநகர மன்னர்களுக்கு உரிய முத்திரை எது?

7. இந்தியாவின் முதல் திரைப்படம் எது?

8. இந்தியாவில் செய்திகளுக்காக மட்டும் தொடங்கப்பட்ட தொலைக்காட்சி சேனல் எது?

9. சுற்றுச்சூழல் கல்வி என்றால் என்ன?

10. ‘நீராடி’ – குறிக்கும் பொருள் யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) “ஊர்ப்பஞ்சாயத்து முறை” – விளக்குக.

(அல்லது)

(ஆ) குËஉக்குறி வழிச் செய்திப் புலப்பாடு பற்றி விளக்குக.

12. (அ) அரசியல் துறையில் பேச்சுக்கலை என்பதனை விளக்குக.

(அல்லது)

(ஆ) சிறந்த பேச்சாளருக்கு உரிய தகுதிகள் யாவை?

13. (அ) செப்புப் பட்டயங்கள் வழி செய்திப்பரவல் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) அச்சுவழிச் செய்திப் பரவலின் பயன்பாடு யாது?

14. (அ) வானொலியின் இந்திய வருகை குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) ‘தொலைபேசி, கைபேசி’ – தகவல் தொடர்பில் பெறுமிடம் குறித்து விளக்குக.

15. (அ) சுற்றுச்சூழல் கல்வி மேம்பாட்டிற்கு அச்சுவழிச் சாதனங்களின் பங்கு யாது?

(அல்லது)

(ஆ) சுற்றுச்சூழல் கல்விப் பணிக்கு செய்தித் திரைப்படத்துறையின் பங்களிப்பு பற்றி விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. மரபுவழிச் செய்திப் பரவல் குறித்து விளக்கிச் சான்று தருக.

17. பேச்சுக்கலையின் இரு நிலைகள் யாவை? சான்றுடன் விளக்குக.

18. அச்சுவழிச் செய்திப்பரவலின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்துக் கட்டுரைக்க.

19. திரைப்படங்கள் வழி செய்திப்பரவலை விவரி.

20. சுற்றுச்சூழல் கல்விக்கு மக்கள் தொடர்புச் சாதனங்களின் பங்களிப்பு குறித்துக் கட்டுரைக்க.

———————

| F–6690 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Fourth Semester**

தமிழ்

சிறப்புப்பாடம் – திருக்குறள் – இன்பத்துப்பால்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. 'யாப்பினுள் அட்ட நீர்' என்று திருவள்ளுவர் எதனைக் குறிப்பிடுகின்றார்?

2. 'காணின் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும்' ஏன்?

3. காம நோய்க்கு எருவாகவும் நீராகவும் இருப்பன யாவை?

4. 'ஊற்று நீர் போல மிகும்' விளக்கம் தருக.

5. 'கள்ளினும் காமம் இனிது' என்று திருக்குறள் கூறக் காரணம் யாது?

6. மாலை மலரும் நோய் யாது? விளக்கம் தருக.

7. 'நாள் ஒற்றித் தேய்ந்த விரல்' யாருடையது? தேய்ந்தமைக்கான காரணம் யாது?

8. 'தும்மல் போல் தோன்றிவிடும்' என்று தலைவி எதனைக் குறிப்பிடுகின்றாள்?

9. ‘உப்பமைந்தற்றால் புலவி’ விளக்கம் தருக.

10. ‘உள்ளம் உடைக்கும் படை’ யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) தகையணங்குறுத்தல் அதிகாரச் செய்திகளைத் தருக.

(அல்லது)

(ஆ) தலைவியின் நலம்புனைந்து தலைவன் உரைத்த செய்திகளை எடுத்துரைக்க.

12. (அ) தலைமக்கள் நாணுத்துறவுரைத்த பாங்கைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) கண்ணை முன்னிறுத்தித் தலைவியின் உள்ளக்காதலை, கண்விதுப்பழிதல் அதிகாரம் உணர்த்தும் அகச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

13. (அ) தலைவியின் தனிமைத் துயரை, ‘தனிப்படர்மிகுதி’ அதிகாரம் எவ்வாறு புலப்படுத்துகிறது?

(அல்லது)

(ஆ) பிரிவுத் துயர் தலைவனையும் தலைவியையும் வருத்திய விதம் பற்றி ‘நினைந்தவர் புலம்பல்’ அதிகாரம் எவ்வாறு சித்திரிக்கின்றது?

14. (அ) தன் நிறை அழிந்த தலைவியின் காம உணர்வுகளைக் காமத்துப்பால் எவ்விதம் நுண்ணிதின் உணர்த்துகின்றது?

(அல்லது)

(ஆ) ‘குறிப்பறிவுறுத்தல்’ அதிகாரம் புலப்படுத்தும் மெய்ப்பாட்டுத் திறத்தை வெளிப்படுத்துக.

15. (அ) நெஞ்சோடு புலத்தல் அதிகாரம் வழி அறியலாகும் தலைவியின் உணர்வுகளைத் தொகுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'புலவி நுணுக்கம்' அதிகாரத்தில் புலப்படும் நாடகப் பாங்கை விளக்குக.

**பகுதி இ** $(3 \times 10 = 30)$

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளி.

16. இன்பத்துப்பாலில் காட்சிப்படும் தலைவன் தலைவி உரையாடல் காட்சிகளை விளக்குக.

17. கற்பு வாழ்வின் மேன்மைகளை, இன்பத்துப்பால் வழி நின்று விளக்குக.

18. பண்டைத் தமிழரின் அகவாழ்வுக் கூறுகளைத் திருக்குறள் எவ்வாறு எடுத்துரைக்கின்றது?

19. பிரிவுத்துயரிலும் பெருமை குன்றாத தலைவியின் அகவுணர்வுகளை மிக நுட்பமாகச் சித்திரிப்பதில் வல்லவர் என்பதைச் சான்றுகள் தந்து விளக்குக.

20. காமத்தை வெல்லத் திருவள்ளுவர் காட்டும் வழிகளை விளக்கிக் கட்டுரை தருக.

———————

| F–6691 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Fourth Semester**

**தமிழ்**

**காப்பிய இலக்கியம்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours    Maximum : 75 Marks

**பகுதி அ**    (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. அமுதசுரபி எங்கு கிடைத்தது?

2. அறவண அடிகளின் சிறப்பு யாது?

3. "யாதினும் இனிய நம்ப" – இது யாருடைய கூற்று?

4. குகன், இராமனைக் காண கொண்டு சென்ற பொருள்கள் யாவை?

5. சீராளன் என்பவன் யார்?

6. பரஞ்சோதியாரின் சிறப்பினைக் கூறுக.

7. நசரேத்தூருக்குச் சென்ற மூவரின் பெயரினைத் தருக.

8. தேம்பாவணி என அழைக்கக் காரணம் என்ன?

9. உமறுப்புலவர் சீறாப்புராணம் பாடக் காரணம் என்ன?

10. மானுக்குப்பிணை நின்ற படலத்தின் மையக்கருத்து யாது?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) புத்த பெருமானுடைய தோற்றச் சிறப்பினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) ஆபுத்திரனின் அறச்செயலின் சிறப்பினைக் குறிப்பிடுக.

12. (அ) குகனுக்கும் இராமனுக்கும் இடையிலான உறவைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) இராமனின் பண்பு நலன்களைக் கூறுக.

13. (அ) சிறுத்தொண்டரின் வீட்டிற்கு வந்த சிவபெருமானின் தோற்றப்பொலிவினைக் குறிப்பிடுக.

(அல்லது)

(ஆ) திருவெண்காட்டு நங்கை திருவமுது செய்தத் திறத்தினை விளக்குக.

14. (அ) தேவதாயின் அன்புரை யாது?

(அல்லது)

(ஆ) சூசையும் மரியும் திருமகனைக் கண்டு தழுவிய நிலையை விளக்குக.

15. (அ) முகமது நபியின் பெருமைகளாகச் சீறாப்புராணம் கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) நபிகள் நாயகத்தைக் கண்டவுடன், மான் தனக்குள் கூறியவற்றை எழுதுக.

**பகுதி இ** (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. மணிமேகலை, அமுதசுரபி பாத்திரம் பெற்ற சிறப்பினை விவரி.

17. இராமன் – குகன் சந்திப்பு இராமாயணத்தில் இன்றியமையாத இடத்தைப் பெற்றுள்ளது என்பதனை நூல்வழி விவரி.

18. சிறுத்தொண்டரின் பக்தியையும் மன உறுதியையும் சேக்கிழார் வழிநிறுவுக.

19. தேம்பாவணியில் இடம்பெறும் பிரிந்த மகவைகாண் படலச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

20. முகமது நபியிடம், வேடனிடமிருந்து தன்னை விடுவிக்கவேண்டி நின்ற மானின் நிலையினைச் சீறாப்புராணத்தின் வழி விளக்குக.

| F–6692 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Fourth Semester**

தமிழ்

தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. உயிரெழுத்தின் பொதுப்பிறப்பு குறித்து எழுதுக.

2. சகரக் கிளவி மொழிமுதலாவது குறித்து எழுதுக.

3. புணர்ச்சியில் திரிபுகளின் (வகைகள்) எவை?

4. உருபியல் - பெயர்க்காரணம் தருக.

5. அகர இறுதிப் பெயர்கள் மயங்கிவருதல் குறித்து எழுதுக.

6. 'புளி' என்னும் மரப்பெயர் பெறும் சாரியை எது? சான்று தருக.

7. னகார இறுதி காரம் ஆதல் எவ்விடம்.

8. 'குயின்' - புணருமாறு குறித்து எழுதுக.

9. குற்றியலுகரத்தின் வகைகள் யாவை?

10. பத்து+ஆயிரம் எனும் சொல் புணருமாற்றை குற்றியலுகரம் புணரியல் வழி எழுதுக.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்க.

11. (அ) மாத்திரை இலக்கணம் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) உச்சகாரம், உப்பகாரம் பற்றி மொழிமரபு கூறுவது யாது?

12. (அ) சாரியைகளின் பெயரும் தொகையும் பற்றி விளக்குக.

(அல்லது)

(ஆ) அளவுநிறைப் பெயர்கள் தம்மிற் புணருமாறு குறித்து எழுதுக.

13. (அ) நாடுரி - பிரித்துப் புணர்ச்சி விதி தருக.

(அல்லது)

(ஆ) ஐகார ஈற்று மரப்பெயர்கள் புணருமாற்றைச் சான்றுடன் விளக்குக.

14. (அ) ஞகார ஈறு வன்கணத்தோடு புணர்தல் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) தேன் என்னும் சொல்லின் புணர்ச்சி குறித்து விளக்குக.

15. (அ) 'தொண்ணூறு' - புணர்ச்சி விதி தருக.

(அல்லது)

(ஆ) நூறு என்பதன் முன் ஒன்று முதலான எண்கள் எவ்வாறு புணர்கின்றன என்பதைக் கூறுக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. மொழிக்கு முதலாகும் மெய்யெழுத்துகள் பற்றி ஒரு கட்டுரை வரைக.

17. இரண்டாம் வேற்றுமைத் திரிபு குறித்து விளக்குக.

18. அகர ஈற்றுப் பெயர்கள் மயங்குமாறு குறித்து உயிர்மயங்கியல் கூறும் கருத்துக்களை எடுத்துரைக்க.

19. மகரவீற்றுச் சொற்களின் மயக்கம் குறித்து ஒரு கட்டுரை வரைக.

20. எண்ணுப் பெயர் புணர்ச்சி குறித்து நீவிர் அறிவன யாவை விளக்குக.

———————

| F–6693 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT4C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Fourth Semester**

தமிழ்

சிற்றிலக்கியம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. திருக்குறளின் சிறப்பு யாது?

2. தமிழ்விடு தூதின் பாட்டுடைத்தலைவனின் பெயர் என்ன?

3. மதுரையில் வளரும் ஓர் இளமயில் யார்?

4. அம்புலிப்பருவம் - குறிப்பு வரைக.

5. ஒட்டக்கூத்தரின் சிறப்பினைக் கூறுக.

6. இராசராச சோழன் உலாவின் மையக்கருத்து யாது?

7. கலிங்கப்போர் பற்றி எழுதுக.

8. கலிங்கப்போரைப் பற்றி பேய் யாரிடம் கூறியது? ஏன்?

9. தெள்ளாறு எறிந்த நந்திவர்மன் எனச் சிறப்பிக்கக் காரணம் யாது?

10. நந்திக் கலம்பகம் உணர்த்தும் செய்தியினைக் குறிப்பிடுக.

பகுதி ஆ $(5 \times 5 = 25)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடையளிக்க.

11. (அ) தமிழின் மாண்புகளைக் குறிப்பிட்டு எழுதுக.

(அல்லது)

(ஆ) மதுரையின் சிறப்புகளைத் தமிழ்விடுதூது நூலின் வழி கூறுக.

12. (அ) குமரகுருபரர் மீனாட்சியம்மையைச் செங்கீரை ஆடி அருளே என்று பாடக்காரணம் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) அம்புலிப் பருவத்தின் வழி மீனாட்சியம்மையின் சிறப்புக்களைக் கூறுக.

13. (அ) இராசராச சோழன் பவனி வந்த சிறப்பினை ஒட்டக்கூத்தர் எங்ஙனம் சிறப்பித்துப் பாடுகின்றார்?

(அல்லது)

(ஆ) இராசராச சோழன் உலா, இலக்கியச்சுவை மிக்கது என்பதனைச் சான்றுடன் விளக்குக.

14. (அ) கலிங்கத்துப்பரணியில் காணப்படும் படையின் சிறப்பினை விளக்குக.

(அல்லது)

(ஆ) அரசனுடைய திருவோலக்கச் சிறப்பினைப் பற்றிக் குறிப்பிடுக.

15. (அ) நந்தி மாண்ட கதை தமிழால் நாடறியும் என்னும் கூற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) தெள்ளாற்றுப் போரின் சிறப்பினை நந்திக் கலம்பகம் வாயிலாகக் கூறுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. தமிழின் சிறப்புகளைத் தமிழ்விடு தூதுவழி விளக்கிக் கட்டுரை வரைக.

17. மீனாட்சியம்மையை அம்புலி ஆட வாவே என்று அழைத்துப் பாடும் கருத்துக்களைக் குமரகுருபரர் வழி நின்று விளக்குக.

18. இராசராசனின் பெருமைகளை ஒட்டக்கூத்தர் வாயிலாகச் சிறப்பித்துக் கூறி விளக்குக.

19. கலிங்கத்துப்பரணியில் காணலாகும் போர்க்களக் காட்சியைச் சிறப்பித்துக் கட்டுரை வரைக.

20. நந்திவர்மன் தமிழ்ப்பற்று மிக்கவன் என்பதனை நந்திக்கலம்பகத்தின் வழிநின்று நிறுவுக.

| F–6694 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS4A1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Fourth Semester**

**தமிழ்**

**திறன் அடிப்படையிலான பாடம் – தமிழிசைக் கலைகள்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours                                        Maximum : 75 Marks

**பகுதி அ**                                        (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. இசைத்தமிழ் – குறிப்பு வரைக.

2. யாழாசிரியன் என்பவர் யார்?

3. தொல்காப்பியம் கூறும் இசை பற்றிய செய்திகள் யாவை?

4. ‘கடம்’ என்பதற்கான வேறுபெயர்கள் யாவை?

5. திருப்புகழில் இசையமைப்புக் குறித்து எழுதுக.

6. நாட்டுப்புற நாடகங்கள் எவை?

7. பாணர்கள் யார்?

8. மாயூரம் வேதநாயகம் பிள்ளை இயற்றிய இசைப் படைப்புகளைக் குறிப்பிடுக.

9. இசைக் கலைஞர்களின் இரு வகைகள் யாவை?

10. கே.பி. சுந்தராம்பாளின் கணவர் பெயர் யாது?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) பரிபாடலில் இசை மேன்மை குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சோழர் காலத்தின் இசை வளர்ச்சி குறித்து எழுதுக.

12. (அ) துளைக் கருவிகள் எவை? அவற்றினைச் சான்று காட்டி எழுதுக.

(அல்லது)

(ஆ) காப்பியங்களின் அமைந்திருக்கும் இசையமைப்பு முறைகளை விளக்குக.

13. (அ) சிற்பம், ஓவியங்களில் அமைந்திருக்கும் இசையமைப்பு முறைகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) நாட்டுப்புற இசையின் தேவை குறித்து எழுதுக.

14. (அ) அரங்கிசை பற்றி விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) விடிலானந்த அடிகள் இசைக் கலைக்கு ஆற்றிய தொண்டு பற்றிக் குறிப்பிடுக.

15. (அ) பாணர்கள் இசைபாடும் திறம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) கிராம இசையை நகரத்திற்கு அழைத்து வந்த பெருமைக்குரியவர்கள் பற்றி எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

**எவையேனும் மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. இசைக் கலையின் முதன்மை குறித்து கட்டுரை வரைக.

17. இசைக் கருவிகள் உருவாக்கும் முறையையும் பயன்படுத்தும் முறையையும் விளக்கி எழுதுக.

18. நாட்டுப்புற இசைக்குப் பயன்படும் இசைக்கருவிகள் எவை? அவை பற்றி விவரித்து எழுதுக.

19. இசை வல்லுநர்களும் அவர்தம் தமிழிசைப் பணிகளும் குறித்து கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

20. ஐம்பெரும் காப்பியத்தில் தோன்றும் இசைக் கலைஞர்கள் பற்றி விவரிக்க.

———————

| F–6699 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6S1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Sixth Semester**

தமிழ்

சிறப்புப் பாடம் : பேச்சுக் கலை

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. நகைச் சுவை பேச்சு ஏன் தேவை?
2. உடல் மொழி என்றால் என்ன?
3. பேச்சின் தொடக்க வகைகள் எத்தனை?
4. எளிமையான மேடைப்பேச்சு என்றால் என்ன?
5. ஆழமாகக்கற்றல் என்றால் என்ன?
6. பல்வகை மேடைகள் யாவை?
7. பட்டிமன்றம் குறித்து இலக்கிய சான்று தருக.
8. பேச்சரங்கம் என்றால் என்ன?
9. ஆசிய ஜோதி குறித்து ஆசிரியர் கூற்று யாது.
10. யூரி ககாரின் யார்?

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) சொற்பொழிவு என்ற பெயர் எவ்வாறு தோன்றியது?

(அல்லது)

(ஆ) சமயச் சொற் பொழிவுகள் எவ்வாறு அமைய வேண்டும்?

12. (அ) பேச்சினைத் தொடங்கும் முறைகுறித்து அ.கி. பரந்தாமன் கருத்து யாது?

(அல்லது)

(ஆ) புதுமையான பேச்சு என்றால் என்ன? விளக்குக.

13. (அ) கு. ஞானசம்பந்தன் அவர்களின் முதல் பேச்சு அனுபவம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வானொலி உரை என்றால் என்ன?

14. (அ) சுழலும் சொல்லரங்கம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) மக்கள் நடை என்றால் என்ன? விளக்குக.

15. (அ) பேச்சுப் பயிலரங்குகள் எவ்வாறு பயிற்சி அளிக்கின்றன.

(அல்லது)

(ஆ) பேச்சில் உயர்ந்த மனிதர்களின் வாழ்க்கை வரலாறுகளை எடுத்துரைப்பது எவ்வாறு?

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக.

16. பேச்சாளரின் தகுதிகள் யாவை? விளக்குக.

17. பேச்சுத் தயாரிப்பு குறிப்புகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. பல்வகை உரைகள் யாவை? அவை குறித்து கட்டுரைக்க.

19. நெகிழ்வும் மகிழ்வும் குறித்துக் கட்டுரை தருக.

20. பேச்சாளனும் வாசிப்பின் முக்கியத்துவம் குறித்துக் கட்டுரை வரைக.

———————

| F–6700 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Sixth Semester**

தமிழ்

சங்க இலக்கியம் – புறம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. மஞ்ஞைக்குப் போர்வை ஈத்தவன் யார்?
2. இன்னாது உறைவி அரும்படர் களைமே! – குறிப்பு வரைக.
3. கோடல் கண்ணியன் யார்?
4. எல்லோர்க்கும் கொடுமதி-மனைகிழ வோயே ! – விளக்குக.
5. ‘உலைக்கல்லன்ன வல்லாளன்’ யார்?
6. ஊராக் குதிரைக் கிழவன் யார்?
7. பதிற்றுப்பத்தின் ஐந்தாம் பத்தைப் பாடியவர்? பாடப்பட்டோர் யார்?
8. ஏறா ஏணி – விளக்குக.
9. ஆற்றுப்படை என்றால் என்ன.
10. குறிப்பு வரைக: ‘சிறு பாணன்’.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக:

11. (அ) வையாவிக் கோப்பெரும் பேகனின் அக வாழ்க்கை பற்றி எழுதுக.

(அல்லது)

(ஆ) தீக்கடைக் கோல் கொண்டு விருந்து போற்றிய பண்பை விளக்குக.

12. (அ) வல்வில் ஓரியின் பெருமைகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) இளவெளிமானின் குணச்சிறுமையைப் புறநானூறு கொண்டு விளக்குக.

13. (அ) பிட்டங்கொற்றன் பற்றிப் புறநானூறு கூறுவனவற்றை எழுதுக.

(அல்லது)

(ஆ) ஈயென இரத்தலோ அரிதே – விளக்கி எழுதுக.

14. (அ) சோறு வேறு என்னா ஊன் துவை அடிசில் – உணவுப்பண்பாட்டை விளக்குக.

(அல்லது)

(ஆ) பேரெழில் வாழ்க்கை – பாடலை விளக்குக.

15. (அ) சிறுபாணாற்றுப்படைதல்: வேனிற்கால வருணனையை விவரி.

(அல்லது)

(ஆ) விறலியின் அழகினை விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தருக:

16. வறுமை இருப்பினும் புலவர்கள் பொருள் வேண்டாப் பேராளர்களாக இருந்ததைப் புறநானூறு கொண்டு விவரிக்க.

17. குமணன் கொடையின் உச்சமாவான் என்னும் கருத்தை நிறுவுக.

18. புறநானூற்று ஒரு வரலாற்றுக் களஞ்சியம் என்னும் கருத்தை விவரிக்க.

19. சேரன் செங்குட்டுவனின் வீரச்சிறப்பினைக் கட்டுரைடக்க.

20. நல்லியக்கோடன் பெருமைகளை விதந்துரைக்க.

———————

| F–6701 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C2 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Sixth Semester**

தமிழ்

தொல்காப்பியம் - பொருளதிகாரம்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடை தருக.

1. பாங்கன் எனும் சொல் யாரைக் குறிக்கும்?
2. தோழி யாருடைய மகள்?
3. பிரிவு வகையில் கல்விக்குரிய காலம் எத்தனை?
4. மொழி எதிர் மொழிதல் யாருக்கு உரியது?
5. தொல்காப்பியர் கூறும் வனப்புகள் எத்தனை?
6. நகை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
7. ‘இரட்டைக் கிளவி’ சான்று தருக.
8. ‘கடுப்ப’ என்பது எவ்வகை உவமம்?
9. கேழல் என்றால் என்ன?
10. ‘புறக்காழ்’ – என்பதற்குச் சான்று தருக.

## பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க அளவில்** விடை தருக.

11. (அ) ஐயப்பாட்டான் துணிதற்குரிய கருவிகள் யாவை?

(அல்லது)

(ஆ) இயற்கைப் புணர்ச்சி குறித்து எழுதுக.

12. (அ) கரணம் குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) கூத்தர்க்குரிய கூற்றுகள் யாவை?

13. (அ) காட்டலாகாப்பொருள் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) அழிவில் கூட்டத்திற்குரிய மெய்ப்பாடுகள் யாவை?

14. (அ) வினை உவமம் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) உவமப் போலி பற்றி விளக்குக.

15. (அ) பெண்பாற் பெயர்கள் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஈரைங் குற்றம் குறித்து விளக்குக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. களவில் இடம் பெறும் தோழி கூற்று குறித்துக் கட்டுரை வரைக.

17. கற்பின் கண் தோழிக்குரிய கூற்றினை விளக்கியுரைக்க.

18. அவத்தைகள் குறித்து தொகுத்துரைக்க.

19. உவமையியல் வெளிப்படுத்தும் கருத்துக்களைத் தொகுத்துரைக்க.

20. இளமைப்பெயர்கள் குறித்து விவரிக்கவும்.

———————

| F–6702 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLT6C3 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Sixth Semester**

தமிழ்

மொழி வரலாறு

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ $(10 \times 2 = 20)$

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. அரியகலை என மு.வ. எதனைக் குறிப்பிடுகிறார்?

2. ‘பேச்சுமொழி ஓடும் ஆறு போன்றது’ – யார் கூற்று?

3. ஒப்புமையாக்கம் என்றால் என்ன?

4. லெனின்கிராடின் பிறிதொரு பெயர் யாது?

5. ‘கடல்’ என்பதனைக் குறிக்கும் வேறு சொற்களைக் குறிப்பிடுக.

6. சன்னல் எம்மொழிச் சொல்?

7. செந்தமிழ் நிலம் எவை?

8. குழந்தை மொழியைக் கற்கும் நிலைகள் எத்தனை வகைப்படும்?

9. சிந்திய மொழிகள் எவையெவை?

10. பாலி மொழியில் எம்மொழிகள் கலந்துள்ளன?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) மொழி அறிஞருக்கு விருந்தாகும் பான்மையை விளக்குக.

(அல்லது)

(ஆ) செயல்மொழி பற்றி விளக்குக.

12. (அ) பொருளும் பெயரும் பற்றி அறிஞர் மு.வ.வின் கருத்துக்களை விவரி.

(அல்லது)

(ஆ) கருத்தின் அருமைப்பாடு குறித்து எழுதுக.

13. (அ) திசைச்சொல் என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) பேச்சு மொழியில் எண்ணுப்பெயர்கள் எவ்வாறு மாறுகின்றன என்பதனை விளக்குக.

14. (அ) கிளைமொழிக்கும் சிறப்பு மொழிக்கும் உள்ள தொடர்புகளை எழுதுக.

(அல்லது)

(ஆ) குறுமொழியை விளக்கிச் சான்று தருக.

15. (அ) போலி மொழி என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) இந்தியாவிற்கு வெளியே உள்ள திராவிடமொழிகள் எவை? விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** கட்டுரை வடிவில் விடை தருக.

16. பேச்சு மொழிக்கும் எழுத்து மொழிக்கும் உள்ள தொடர்பினை விவரி.

17. பல்வேறு இடங்களில் நிலவும் சொல் பற்றிய மூடநம்பிக்கைகளைத் தொகுத்தெழுதுக.

18. ஒலித்திரிபு குறித்துக் கட்டுரைக்க.

19. குழந்தை மொழி குறித்துக் கட்டுரைக்க.

20. தமிழ் மொழி குறித்து விவரிக்க.

———————

| F–6703 |
|---|

| Sub. Code |
|---|
| 7BLTE3A |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022.**

**Sixth Semester**

**தமிழ்**

**விருப்பப்பாடம் :** கல்வெட்டியல்

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடை தருக.

1. 'தென்னிந்திய பிராமி' என்று அழைக்கப்பட்ட மொழி எது?

2. 'சமவயங்க சுத்த' எந்தச் சமய நூல்?

3. தஞ்சை பெரிய கோவில் கல்வெட்டு எந்த மொழியில் அமைந்துள்ளது?

4. ராஜ ராஜ சோழன் வெளியிட்ட காசுகளில் இருந்த மொழி யாது?

5. கல்வெட்டாய்வு என்றால் என்ன?

6. ஐராவதம் மகா தேவன் எழுதி வெளியிட்ட நூல் எது?

7. நாள் எழுத்து என்றால் என்ன?

8. ஏ.சி. ஹாடன் குறிப்பிடும் எழுத்து வளர்ச்சி முறைகள் யாவை?

9. செப்பேட்டில் காணப்படும் மங்கலச்சொற்கள் யாவை?

10. செப்பேட்டில் ஆண்டுகள் குறிப்பிடும் முறைகள் யாவை?

**பகுதி ஆ** (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடை தருக.

11. (அ) தமிழ் எழுத்து என்றால் என்ன?

(அல்லது)

(ஆ) நெடுமான் அஞ்சி-கால கல்வெட்டுகள் குறித்து எழுதுக.

12. (அ) சோழ மன்னர்கள் காலக் கல்வெட்டுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தமிழில் உள்ள எடுத்தல் அளவைகள் யாவை?

13. (அ) தென்னிந்தியக் கல் வெட்டுத் தொகுதிகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) தஞ்சை சரஸ்வதி மகாலில் உள்ள கல்வெட்டுகள் குறித்து எழுதுக.

14. (அ) ஓவியத்தில் காணப்படும் உருவ எழுத்துக்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பானை ஓடுகளில் காணப்படும் உருவ எழுத்துக்கள் குறித்து எழுதுக.

15. (அ) மஞ்சிக் கல்லுக் கல்வெட்டு குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) சமஸ்கிருத மொழிச் செப்பேடுகள் குறித்து எழுதுக.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு கட்டுரை வடிவில் விடை தருக.

16. வட்டெழுத்துக்கள் குறித்துக் கட்டுரை வரைக.

17. தமிழக அளவை முறைகள் குறித்துக் கட்டுரை வரைக.

18. தமிழக அரசின் தொல் பொருள் துறையின் பணிகள் யாவை? விளக்குக.

19. எழுத்துக் கலை என்றால் என்ன? விரிவாக எடுத்துரைக்க.

20. செப்பேடுகளில் காணப்படும் வேறுபாடுகள் யாவை - விளக்குக.

———————

| F–6704 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS6A1 |

**B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022**

**Sixth Semester**

**தமிழ் - திறன் அடிப்படையிலான பாடம்**

**படைப்பாக்கவியல்**

**(CBCS – 2017 onwards)**

Time : 3 Hours Maximum : 75 Marks

**பகுதி அ** (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஓரிரு வரிகளில்** விடையளிக்க.

1. வெண்பாவுக்குரிய ஓசை யாது?

2. ஆசிரியப்பாவிற்குரிய தளைகளைச் சுட்டுக.

3. தமிழில் புதுக்கவிதை நூல்கள் படைத்துள்ள கவிஞர்கள் இருவர் பெயர்களைத் தருக.

4. தமிழில் ஹைகூக் கவிதைகள் படைத்தோர் யாவர்?

5. சிறுகதை எத்தனை பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும்?

6. சிறுகதை - வரையறை தருக.

7. வானொலி நாடகம் - குறிப்பு வரைக.

8. நீவிர் அறிந்த நாடகாசிரியர்கள் இருவர் பெயர்களைத் தருக.

9. தமிழின் தலைசிறந்த கட்டுரையாசிரியர்கள் பெயர்களுள் இரண்டனைத் தருக.

10. ‘பெண்ணின் பெருமை’ என்ற கட்டுரை நூலின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் **ஒரு பக்க** அளவில் விடை தருக.

11. (அ) 'பகைவனுக் அருள்வாய்' எனும் பொருண்மையில் ஆசிரியப்பா மரபில் கவிதை இயற்றுக.

(அல்லது)

(ஆ) 'எல்லார்க்கும் நன்றிங்கெது?' என்னும் பொருண்மையில் இரு வெண்பாக்களை இயற்றுக.

12. (அ) 'நிழலில் ஒடுங்கும் நிஜம்' - எனும் பொருண்மையில் நூறு வரிகளுக்கும் குறையாத அளவில் புதுக்கவிதை படைத்திடுக.

(அல்லது)

(ஆ) இயற்கையின் சீற்றங்களை மையப்படுத்திச் சில ஹைக்கூக்களை இயற்றுக.

13. (அ) ஒரு சிறுகதையின் தொடக்கமும் முடிவும் எவ்வாறு அமைதல் வேண்டும்?

(அல்லது)

(ஆ) சிறுகதையின் கட்டமைப்பு எவ்வாறு இருத்தல் வேண்டும்?

14. (அ) ஒரு நாடகத்தின் வெற்றிக்கு இன்றியமையாது இருக்க வேண்டியவை யாவை?

(அல்லது)

(ஆ) நாடகம் இயற்றுபவர் அவசியம் அறிந்திருக்க வேண்டுவன குறித்து எழுதுக.

15. (அ) உம்மைக் கவர்ந்த இரு கட்டுரையாளர்களின் எழுத்தாற்றலை விவரிக்க.

(அல்லது)

(ஆ) ஒரு கட்டுரையின் தலைப்பும் அதன் உள்ளடக்கமும் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதை விளக்குக.

பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்கு** கட்டுரை வடிவில் விடை தருக.

16. 'நோய்களே இல்லாத் தாயகம் படைப்போம்' என்ற பொருண்மையில் மரபுக் கவிதை புனைக.

17. "தடைக்கற்களே படிக்கற்களாக" - எனும் பொருண்மையில் - புதிய பாணியில் புதுக்கவிதையோ அல்லது பத்து ஹைக்கூக் கவிதைகளோ படைத்தளிக்க.

18. பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒரு பொருண்மை பற்றிச் சிறுகதை புனைக.

(அ) சுடாத நெருப்பு

(ஆ) பகைவனின் அன்பு

(இ) உறங்க மறுக்கும் நினைவுகள்.

19. பின்வரும் பொருண்மைகளுள் ஏதேனும் ஒன்று பற்றி நாடகம் புனைக.

(அ) பிரிந்தவர் கூடினால்...

(ஆ) மௌன மயக்கங்கள்

(இ) விடை தெரியாத விடுகதை.

20. ஏதேனும் ஒரு தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அ) ஆயுதமாகும் அறிவு

(ஆ) தனிமைக்குத் துணையான தமிழ்நூல்

(இ) ஓய்வுக்கு ஓய்வளிப்போம்.

| F–6705 |
|---|

| Sub. Code |
|---|
| 7SBS6A2 |

## B.Lit. DEGREE EXAMINATION, APRIL 2022

### Sixth Semester

### தமிழ்

### திறன் அடிப்படையிலான பாடம் : தமிழ் பயிற்றும்முறை

### (CBCS – 2017 onwards)

Time : 3 Hours Maximum : 75 Marks

பகுதி அ (10 × 2 = 20)

**அனைத்து** வினாக்களுக்கும் ஓரிரு வரிகளில் விடையளிக்க.

1. தாய் தன் குழந்தையிடம் பேசும் மொழியை எவ்வாறு அழைக்கிறோம்?
2. எண்ண வளர்ச்சிக்கு இன்றியமையாதது எது?
3. 'வார்தாக் கல்வி முறை' – விளக்கம் தருக.
4. 'கண்டறி முறை' – விளக்கம் தருக.
5. மொழிப்பாடத்தைப் பொறுத்த மட்டில் வீட்டு வேலையாக அமைபவை யாவை?
6. குழந்தைக் கதைகளின் வகைகள் சிலவற்றைக் குறிப்பிடுக.
7. நல்ல உச்சரிப்பு வளர்ச்சிக்கு மேற்கொள்ள வேண்டிய பயிற்சி யாது?
8. நண்பர்களுக்கு எழுதப்படும் கடிதங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
9. சாத்திரங்களை மேனாட்டார் எவ்வாறு அழைக்கின்றனர்?
10. இலக்கணம் கற்பதால் ஏற்படும் இன்றியமையாத நலன்களை எடுத்துரைக்க.

பகுதி ஆ (5 × 5 = 25)

**அனைத்து** வினாக்களுக்கும் ஒருபக்க அளவில் விடை தருக.

11. (அ) பயிற்று மொழி தாய்மொழியாக விளங்குவதால் ஏற்படும் பயன்களை விவரிக்க.

(அல்லது)

(ஆ) பாடத்தைக் கற்பித்தலில் உள்ள ஐந்து படிகளை விவரிக்க.

12. (அ) கல்வி பயிற்றும் பழைய முறைகளில் உள்ள குறைபாடுகளை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) விளையாட்டு முறைக் கல்வி பயிற்றலை விவரிக்க.

13. (அ) வாய்மொழிப் பயிற்சியின் நோக்கங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) 'சொற் களஞ்சியப் பெருக்கம்' – குறித்து விவரிக்க.

14. (அ) மொழிப் பயிற்சி – பயிற்றுவத்தலில் இன்றியமையாத இடம் பெறும் பாங்கினை விவரிக்க.

(அல்லது)

(ஆ) மாணாக்கரின் படைப்பாற்றலை வளர்க்க உதவும் வழிகளை ஆராய்க.

15. (அ) பா நடைக்கும் உரை நடைக்கும் உள்ள வேற்றுமைகளை விவரிக்க.

(அல்லது)

(ஆ) இலக்கணம் பயிற்றுவிப்பதற்கான நோக்கங்களை எடுத்துரைக்க.

## பகுதி இ (3 × 10 = 30)

எவையேனும் **மூன்றனுக்குக்** வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க.

16. கல்வித் திட்ட ஆராய்ச்சி குறித்துக் கட்டுரை தருக.

17. பயிற்றும் முறைகளுக்கு உதவும் மேனாட்டார் பயிற்று முறைகளை ஆராய்ந்து கட்டுரைக்க.

18. படிப்பின் நோக்கத்தை விளக்கி, அதன் வகைகளை விரிவாக எடுத்துரைக்க.

19. இலக்கியம் கற்பித்தலின் நோக்கத்தை எடுத்துரைத்து, உரைநடை கற்பிக்கும் முறைமைகளை விவரிக்க.

20. மொழியைக் கற்க இலக்கணப் பாடம் இன்றியமையாதது என்பதை விளக்கி, அதனைக் கற்பிக்கும் முறைமைகளை விவரிக்க.